17th July 1964]

Full Finance Scheme.

* 510 Q.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to extend Full Finance Scheme to the backward areas in Kanyakumari district?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஆம். இத் திட்டம் 1964-65-ல் கீழ்க்கண்ட அபிவிருத்தி வட்டாரங்களுக்கு விஸ்தரிக்கப்படும் :—

1. முன்சிறை.
2. ராஜக்கமங்கலம்.
3. மேல்புறம்.
4. கிள்ளியூர்.
5. தோவாளை.

SRI M. WILLIAM : Will the Government introduce the Scheme in Melpuram and other Blocks in Kanyakumari district during this year?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இது 1964-65-ல் சேர்க்கப்படுவதைப் பற்றித்தான். மூன்றாவது திட்டம் முடிவதற்குள் மற்ற எல்லா இடங்களிலும் இது வரும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of the fact that the ryots who applied for loans even in non-Full Finance Scheme areas are being denied the loans for the reason that they are members of the Co-operative Societies, will the Government issue necessary instructions to the Panchayat Union Commissioners to the effect that loans may be granted to the ryots even in non-Full Finance Scheme areas ever though they are members of the Co-operative Societies?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் என்றால், அந்த ஸ்கீம் எங்கெல்லாம் உள்ளதோ அங்கு எல்லோரும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டும். மற்றபடி ஏதாவது ஸ்பெஷல் லோன் என்றால், அது அவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் மூலம் அல்லது சர்க்கார் மூலம் கொடுக்கப்படும். புல் ஃபைனான்ஸ் ஸ்கீம் இல்லாத இடத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், மற்றபடி கம்யூனிடி டெவலெப்மெண்ட் இலாகா மூலமும் சர்க்கார் மூலமும் வாங்குகிறார்கள்.

புவனேஸ்வர் மகாநாட்டு ஆண்டு மலரில் விளம்பரம்.

* 511 கேள்வி.— திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புவனேஸ்வர் நகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் வெளியிட்ட ஆண்டு மலரில் தமிழ்நாடு அரசாங்கம் விளம்பரம் கொடுத்ததா ?

(இ) எந்தெந்த இலாகாக்கள் விளம்பரம் கொடுத்தன ?